**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி**
**அசல் வழக்கு எண் 189/2012**

பெயர் : பூபதி நாள் : 26.08.2022

வா.சா.2 – 4 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை.

வா.சா.2 – பூபதி - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

இந்த வழக்கை யார், யார்மீது தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விபரம் எனக்கு தெரியும். பச்சியம்மாளும், அவருடைய வாரிசுகளும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். வடிவேலு, பாலு, சின்னபொண்ணு, அழகப்பன் என்பவர்களுக்கு எதிராக வழக்கு போட்டுள்ளார்கள். எனக்கு எந்த சர்வே எண்ணில் உள்ள சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விபரமும், அதன் விஸ்தீரணமும் தெரியாது. வாதிகள் வழக்கு சொத்தை அனுபவிப்பதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். 3, 4 பிரதிவாதிகள் வாதிகளின் குடும்பத்தை சார்ந்தவர்களா என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. நான் முதன்மை சாட்சியத்தில் கூறியுள்ள விபரங்கள் எனக்கு தெரியும். நான் முதன்மை சாட்சியத்தில் வாதிகளும், பிரதிவாதிகளும் பங்காளிகள் என்று கூறியுள்ள விபரம் சரியானது என்று சொன்னால், சரிதான். நான் முதன்மை சாட்சியத்தில் குமரகவுண்டருக்கு சொந்தமானது நிலத்தை ஒரு செல்லப்பனுக்கு விற்று வழக்கு சொத்தை வாங்கியதாக கூறியுள்ளேன் என்றால், சரிதான். குமரகவுண்டர் எந்த தேதியில் எந்த நிலத்தை எவ்வளவு விஸ்தீரணத்தை விற்றார் என்ற விபரம் தெரியுமா என்றால், தெரியாது. நிலத்தை விற்று யாரிடம் எவ்வளவு நிலம் வாங்கினார் என்ற விபரம் தெரியுமா என்றால், தெரியாது. வழக்கு சொத்திற்கு வடபுறமாக ஒரு தார் சாலை செல்கிறதா என்றால், செல்கிறது. அந்த தார் சாலை வழியாக கிழபுறம் சென்றால், கவுண்டடேரியும், மேற்குபுறம் சென்றால், புதூரையும் அடையலாம் என்றால், சரிதான். வழக்கு சொத்தில் கிழக்குபுறமாக 1 ம் பிரதிவாதி அழகப்பன் அனுபவித்தில் உள்ளார் என்றால், சரிதான். அவருடைய நிலத்திற்கு மேற்கே 2 ம் பிரதிவாதி அனுபவத்தில் உள்ளார் என்றால், சரிதான். 2 ம் பிரதிவாதி அனுபவ நிலத்தில் 2 அட்டை வீடுகளும், ஒரு கூரை வீடும் உள்ளது என்றால், சரிதான். அந்த வீடுகளுக்கு மின்சார இணைப்பு உள்ளது என்றால், சரிதான். அந்த இடத்தில்தான் 4 முதல் 6 வாதிகள் விசைத்தறி தொழில் செய்து வருகிறார்கள் என்றால், சரிதான். 2 ம் பிரதிவாதியும் 4 முதல் 6

வாதிகளுடன் இருந்த வருகிறார் என்றால், சரிதான். 2ம் பிரதிவாதியின் நிலத்திற்கு மேற்கே 4ம் பிரதிவாதி கிரையம் பெற்ற நிலம் உள்ளது என்றால், சரிதான். அந்த நிலத்தை 3ம் பிரதிவாதியிடமிருந்து 4ம் பிரதிவாதி கிரையம் பெற்றார் என்றால், சரிதான். அதில் ஒரு கூரை வீடு உள்ளது என்றால், சரிதான். அந்த கூரை வீடு சிதிலடைந்து உள்ளதால் யாரும் குடியில்லை. அந்த வீட்டில் 4ம் பிரதிவாதிதான் குடியிருந்து வருகிறார் என்றால், வாதிகளும் உள்ளார்கள். மேற்கு பகுதியில் உள்ள நிலத்தை 4ம் பிரதிவாதி மட்டுமே அனுபவித்து வருகிறார் என்றாலும், அதில் வாதிகள் அனுபவத்தில் இல்லையென்றாலும், நான் பொய்யாக வாதிகள் அனுபவத்தில் உள்ளதாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல. 2ம் பிரதிவாதி சின்னபொண்ணு வழக்கு சொத்தில் இல்லை, தனியாக இருந்து வருகிறார். 2ம் பிரதிவாதி எந்த ஊரில் வசித்து வருகிறார் என்ற விபரம் தெரியுமா என்றால், தெரியாது. 2ம் பிரதிவாதி வழக்கு சொத்தில்தான் குடியிருந்து வருகிறார் என்று முன்பு கூறிவிட்டு, தற்போது வேறு இடத்தில் இருந்து வருகிறார் என்று முன்னுக்கு பின்னாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. வழக்கு சொத்து குறித்து எந்த விபரமும் தெரியாது என்றாலும், அதனால்தான் நான் வாதி பிரதிவாதிகளின் உறவுமுறையை தவறாக கூறி சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல. வழக்கு சொத்து குமரகவுண்டருக்கு தனிப்பட்ட சொத்து என்பதை மறைத்து பரம்பரை சொத்து என்று நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. 4ம் பிரதிவாதி அவர் கிரையம் பெற்ற சொத்தை அனுபவித்து வருறிார் என்றாலும், அவரை ஏமாற்ற வேண்டுமென்ற நோக்கத்திற்காகத்தான் வாதிகளும், 1, 2 பிரதிவாதிகளுடன் சேர்ந்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால், சரியல்ல. நான் வாதிக்கு வேண்டப்பட்டவர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், அதனால் நான் அளித்த சாட்சியம் ஏற்கத்தக்கது அல்ல என்று சொன்னால், சரியல்ல.

ஒப்பம் /பூபதி

ஒப்பம் / திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.